DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 236/2024**

**Deposition of LW3 examined as PW3** Dt. 02.02.2026

| | |
|---|---|
| Name | செல்வம் |
| Husband's Name | சிங்காரம் |
| Village | T. மணல்மேடு |
| Taluk | |
| Age | 66/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 02.06.2026

(Accused absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

சாட்சி மனுவின் பேரில் குறுக்கு விசாரணை செய்தவற்காக மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில்

**குறுக்கு விசாரணை**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் ஆக்கூர் நவீன அரிசி ஆலையில் லோடுமேனாக பணிபுரிந்து வருகிறேன். எனது மகள் ஷீலா எனக்கு எத்தனாவது மகள் என்றால் முதல் மகள் ஆவார். அவர் தற்பொழுது என்ன வேலை செய்து வருகிறார் என்றால் வேலைக்கு செல்லவில்லை வீட்டில் இருந்து வருகிறார். ஏற்கனவே என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் ஸ்வீட் கடையில் பணிபுரிந்து வந்தார். என் மகளுக்கும், எதிரிக்கும் நடைபெற்ற திருமணம் காதல் திருமணமா என்றால் இல்லை நிச்சயிக்கப்பட்ட திருமணமாகும். என் மகள் வேலைக்கு செல்வதை எதிரி விரும்புவாரா என்றால் எதிரியுடன் என் மகள் வாழ்ந்த சமயத்தில் அவர் வேலைக்கு செல்லவில்லை. நான் சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், அ.சா.2 எனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அ.சா.2 எதிரியுடன் அடிக்கடி சண்டை இட்டு கோபித்துக் கொண்டு வீட்டிற்கு வந்து விடுவதால் அவரது பேச்சைக் கேட்டுக் கொண்டு எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.